முதலமைச்சர் விஜய் சட்டமன்றத்தில் பேசிய ஆணவப் பேச்சினைக் கண்டித்து – ஒருங்கிணைந்த

# திருச்சி மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அறிவிப்பு!



திருச்சி, செப்.11–

முதலமைச்சர் விஜய் அவர்கள் சட்டமன்றத்தில் பேசிய ஆணவப் பேச்சினை கண்டித்து திருச்சி மத்திய, வடக்கு, தெற்கு, கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அது குறித்து கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்து கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

திரையுலக மோகம் மற்றும் கவர்ச்சி மூலமாக மக்களை மயக்கி போலியான பிம்பத்தை சமூக ஊடகங்களின் மூலமாக கட்டமைத்து குழந்தைகளை ஏமாற்றி குடும்பத்திற்குள் குழப்பங்களை ஏற்படுத்தி போலி வாக்குறுதிகள் அளித்து ஆட்சியமைக்கும் வலிமையை பெறமுடியாத நிலமையினால் தி.மு.க.வின் தலைமையில் அமைந்த கூட்டணியில் வென்ற கட்சிகளுக்கு அமைச்சர்கள் பொறுப்புகளை வழங்கி, ஆட்சியமைத்துள்ள விஜய் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தையும், ஐந்து முறை இந்நாட்டை ஆண்ட முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களையும், இந்தியாவின் புகழை தோகா மாநாட்டில் நிலை நாட்டிய பொருளாதார மேதை முரசொலிமாறன் அவர்களையும், திருமணமான ஐந்தே மாதங்களில் தன்னுடைய 23வது வயதில் அவசர நிலை சட்டத்தால் கைது செய்யப்பட்டு, சிறைச்சாலையில் சித்திரவதைகளை அனுபவித்து ஓராண்டு காலம் சிறையில் இருந்து தியாகம் செய்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தியாகத்தையும் கொச்சைப் படுத்தி, தமிழக சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் அவர்கள் பேசிய அருவருப்பான உரையினைக் கண்டித்து நாளை (12.09.2026 –சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் திருச்சி மத்திய, வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகிய மாவட்டங்களில் சார்பில் திருச்சி, மரக்கடை எம்.ஜி.ஆர் சிலை அருகில் எனது (தி.மு.கழக முதன்மைச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர், கே.என். நேரு) தலைமையிலும், மாவட்ட திமுக செயலாளர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, க.வைரமணி, ந.தியாகராஜன் ஆகியோர் முன்னிலையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெறவிருக்கிறது.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருச்சி மத்திய, வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு ஆகிய மாவட்டங்களிலுள்ள மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கிளைக்கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் மற்றும் செயல்வீரர்கள் அனைவரும் எழுச்சியுடன், அலைகடலென தவறாது கலந்து கொண்டு இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தை வெற்றிபெறச் செய்ய வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

புதுச்சேரி – தட்டாஞ்சாவடியில் இடைத்தேர்தல் :

# கழக வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

## ஜெகத்ரட்சகன் எம்.பி. – இரா.சிவா பங்கேற்பு!

புதுச்சேரி, செப். 11-

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சேது செல்வம், திமுக கொள்கை பரப்புச் செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி மற்றும் திமுக மாநில அமைப்பாளர் சிவா தலைமையில் நேற்று தனது பிரச்சாரத்தை தொடங்கி வாக்கு சேகரித்தார்.

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதிக்கான இடைத்தேர்தல் அக்டோபர் 6ஆம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் நேற்று துவங்கிய நிலையில், வரும் 16ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் இறுதி நாளாகும்.

இந்நிலையில் தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சேது செல்வம் நேற்று தனது பிரச்சாரத்தை தொடங்கினார். திமுக கொள்கைப் பரப்புச் செயலாளர் ஜெகத்ரட்சகன் மற்றும் மாநில அமைப்பாளர் சிவா ஆகியோர் தலைமையில், வேட்பாளர் சேது செல்வம் தட்டாஞ்சாவடி தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பிரச்சார தொடக்க நிகழ்ச்சியில் அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர்கள் வி. அனிபால் கென்னடி, அ. தைரியநாதன், திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. செந்தில்குமார், விக்னேஷ் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் ந. தங்கவேலு, தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், கோ. தியாகராஜன், செ.நடராஜன், ஆறுமுகம், அணி அமைப்பாளர்கள் செந்தில் முருகன், காயத்ரி, துணைத் தலைவர்கள் குரு, நவீன், துணை அமைப்பாளர்கள் தேவேந்திரன், கிருபா சங்கர், சிவதாஸ், சசிகுமார், நடராஜன், அஜய் பாரத், முத்து, பாலசுப்பிரமணியன், சுரேஷ், பால்ராஜ், சுரேஷ், தமிழ்மொழி, பிச்சாண்டி, ராஜா, பழனிசாமி, கலைவாணன், மதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த திமுக கொள்கை பரப்புச் செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி, இது ஒரு பிரகாசமான தொகுதி. இந்தத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகம் பல முறை வெற்றி பெற்றிருக்கிறது. இந்தத் தேர்தலில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. திமுகதான் தமிழ்நாட்டிலும் புதுச்சேரியிலும் பலமான கட்சி. திமுக மிகப்பெரிய ஆலமரம் போன்றது. இது நூறு ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட மாபெரும் இயக்கம். மற்றவர்கள் கூட்டணியில் சேர வந்தால் வரலாம்; அதற்காக திமுக மற்றவர்களைத் தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்றார்.

புதுச்சேரியில் தட்டாஞ்சாவடி தொகுதியில் மிகப் பெரிய மாற்றத்தை நடத்திக் காட்டுவோம். மக்கள் மாற்றத்திற்குத் தயாராக இருக்கிறார்கள். புதுச்சேரியில் சபாநாயகர் தேர்தல் கூட நடத்த முடியவில்லை. இத்தகைய இக்கட்டான சூழ்நிலை நிலவுகிறது. இந்தத் தொகுதியில் சேதுசெல்வம் வெற்றி பெற்றால், புதுச்சேரி அரசியலில் ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டு வர முடியும். புதுச்சேரியில் நடைபெறும் இடைத்தேர்தலில் திமுக மிகப்பெரிய வெற்றியைப் பெறும்.

இவ்வாறு ஜெகத்ரட்சகன் பேட்டியளித்தார்.



புதுச்சேரி மாநிலம் தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து கழக கொள்கை பரப்பு செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., மாநில கழக பொறுப்பாளர் இரா.சிவா உள்ளிட்டோர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நிர்வாக மறுசீரமைப்பு கலந்தாய்வு கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மறுசீரமைப்பு பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி மறுசீரமைப்பு பணிக்கான படிவத்தை வழங்கினார். உடன் ஆதிதிராவிட நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், எஸ்.ஜெயபாலன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், இளைஞரணி நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார், வழக்கறிஞர் பெ.வினோத் ஒன்றிய நிர்வாகிகள் அண்ணாமலை, ஏ.ஜனார்த்தனன், எம்.இளையான், எஸ்.புகழேந்தி, சுமதிகுமார், ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ் க.பரிமேலகழன், கே.விக்னேஷ் உள்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

மதுராந்தகம்–தாராபுரம் இடைத்தேர்தல் பணிகள்!

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி மதுராந்தகம்-தாராபுரம் இடைத்தேர்தல் பணிகள் குறித்து தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசனைக் கூட்டங்கள் அணியின் செயலாளர் **முனைவர் டி.ஆர்.பி.ராஜா** அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளன.

**தாராபுரம் தொகுதி** இடைத்தேர்தலுக்கான ஆலோசனைக் கூட்டம் 12–9–2026 **சனிக்கிழமை மாலை 4.30 மணி அளவில்** தாராபுரத்தில் நடைபெறும்.

**மதுராந்தகம் தொகுதி** இடைத்தேர்தலுக்கான ஆலோசனைக் கூட்டம் 13–9–2026 **ஞாயிறு மாலை 6 மணி அளவில்** மதுராந்தகத்தில் நடைபெறும்.

இந்த இரண்டு தொகுதிகளுக்குட்பட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில-மாவட்ட-தொகுதி-ஒன்றிய-நகர-வட்ட-பாக நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை
நாள்- 10.09.2026

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர், தகவல் தொழில்நுட்ப அணி தி.மு.க.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# திருவேற்காடு நகரம், திருநின்றவூர் நகரம், திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் எல்லாபுரம் மத்திய ஒன்றியம் ஆகிய நிர்வாகம் வாரியாக மறுசீரமைப்பு கலந்தாய்வுக் கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!



கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தலைமை கழக பிரதிநிதிகள் மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா Ex MLA, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் முன்னிலையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட திருவேற்காடு நகரம் திருநின்றவூர் நகரம் திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் மற்றும் எல்லாபுரம் மத்திய ஒன்றியம் ஆகிய நிர்வாகங்களில் மறுசீரமைப்பு கலந்தாய்வுக் கூட்டம் பின்வரும் அட்டவணைப்படி நடைபெறும்.

**நாள் : இன்று (11-09-2026 வெள்ளிக்கிழமை)**

| நேரம் | நிர்வாகம் | செயலாளர்கள் | இடம் |
|---|---|---|---|
| காலை 9 மணி | திருவேற்காடு நகரம் | NEK.மூர்த்தி | நகர கழக அலுவலகம் |
| காலை 11 மணி | திருநின்றவூர் நகரம் | தி.வை.ரவி | சண்முகா மண்டபம் |
| மாலை 4 மணி | திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | டி.முரளி கிருஷ்ணன் | RM.கெஸ்ட் ஹவுஸ் |
| மாலை 6 மணி | எல்லாபுரம் மத்திய ஒன்றியம் | தங்கம் முரளி | ஒன்றியம் இல்லம் |

மேற்கண்ட அட்டவணைப்படி நடைபெறும் மறுசீரமைப்பு கலந்தாய்வுக் கூட்டங்களில் அந்தந்த நிர்வாகங்களுக்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக, கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு தங்களின் ஆலோசனைகளை வழங்கிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட

# பொதுமக்கள் - மீனவர்களின் எதிர்ப்பை மீறி அரசாணை வெளியீடு!

## த.வெ.க. அரசின் ஆணவச் செயலுக்கு பலரும் கண்டனம்!

சென்னை, செப்.11-

சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட பொதுமக்களும், மீனவர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கடலை பார்த்தபடி முதல்வர் அறை இருக்க வேண்டும் என விஜயின் ஜோதிடர் கூறியதற்காக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அடியோடு அழிப்பதா என மீனவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதனையும் மீறி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை பட்டினப்பாக்கத்தில் த.வெ.க. அரசு புதிதாக தலைமைச் செயலகம் கட்டப்பட உள்ள பகுதியில், முள்ளிக்குப்பம், சீனிவாசபுரம், ராஜீவ் காந்தி நகர், பவானி குப்பம், இருதயபுரம், செல்வராஜ்புரம், டுமிங் குப்பம், நொச்சி நகர், நொச்சிக்குப்பம் ஆகிய 9 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மக்கள், மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதியில் புதிய தலைமைச் செயலகம் அமையும் பட்சத்தில், தங்களுடைய வாழ்வாதாரம் அடியோடு பாதிக்கப்படும் என மீனவர்கள் அச்சமடைந்துள்ளனர். மேலும், பட்டினப்பாக்கம், சாந்தோம், மயிலாப்பூர் ஆகிய பகுதிகள் பள்ளி மண்டலமாக உள்ள நிலையில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் இப்பகுதிகளில் உள்ள பள்ளிகளில் படித்து வருகின்றனர். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான், ஏற்கனவே ஆட்சி புரிந்த திமுக, அதிமுக அரசுகள், புதிய தலைமைச் செயலகம் கட்ட பட்டினப்பாக்கத்தை தேர்வு செய்யவில்லை.

ஆனால், கள நிலவரத்தையே கருத்தில் கொள்ளாமல் இடத்தை மட்டும் கணக்கில் கொண்டு தவெக அரசு எடுத்துள்ள முடிவு மீனவ மக்களை அச்சமடைய வைத்துள்ளது. விஜயின் வீட்டின் அருகே தலைமைச்செயலகம் வேண்டும் என்பதற்காக பட்டினம்பாக்கத்தை தேர்வு செய்வதா என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடலை பார்த்தபடி முதல்வர் அறை இருக்க வேண்டும் என விஜயின் ஜோசியர் கூறியதற்காக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அடியோடு அழிப்பது எந்த வகையில் நியாயம்? என்றும் மீனவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

பிரச்சாரங்களில் மீனவர்களின் நண்பன் என வசனம் பேசிவிட்டு, முதலமைச்சரானதும் மீனவர்களுக்கு எதிராக விஜய் நடந்து கொள்கிறார் என்றும் சினிமாவில் எளிதாக வசனம் பேசி சென்றுவிடலாம் நிஜத்தில் மக்களின் நலனை விஜய் அரசு கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் மீனவ மக்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் நலத்திட்டங்களுக்கு நிதி இல்லை ஆனால், முதல்வருக்கு புதிய அறை, புதிய தலைமைச்செயலகம் கட்ட மட்டும் எங்கிருந்து பணம் வந்தது? த.வெ.க. எம்எல்ஏக்களுக்கு கார் வழங்க எங்கிருந்து நிதி வந்தது? எனவும் மீனவ மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும் நொச்சிக்குப்பம், சீனிவாசபுரம், முள்ளிக்குப்பம் உள்ளிட்ட 9 கிராமங்கள் மட்டுமின்றி, பழவேற்காடு முதல் கோவளம் வரை உள்ள மீனவ அமைப்புகள் ஒன்று சேர்ந்து வரும் 15-ஆம் தேதி ஆலோசனைக் கூட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர். புதிய தலைமைச் செயலகம் கட்டும் முடிவை த.வெ.க. அரசு கைவிட மறுக்கும் பட்சத்தில், தொடர் போராட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளதாகவும் மீனவ சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே, பொது மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி பட்டினப்பாக்கத்தில் தலைமைச்செயலகம் கட்டுவதற்கான அரசாணையை தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ளது. 22 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் 1200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும் என்று அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் டார்லிங்ராஜா அவர்களின் திருவுருவபடத்தை கும்மிடிப்பூண்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தி குடும்பத்திற்கு ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார். நிகழ்ச்சியில் மு.மணிபாலன், சக்கரவர்த்திரெட்டியார், ஜான்(எ)பொன்னுசாமி, தில்லைகுமார், பொன்குப்பன், சுரேஷ், சித்ராபாபு, ஸ்ரீராமுலு, ஆப்ரகாம், சீனிவாசுலு, நாகபூஷணம், விஜியன், வழக்கறிஞர் முனுசாமி, ரஹீம், கோகுலகிருஷ்ணன், திலீப்குமார், அருண்குமார், ராமராவ், எட்வர்ட்துரை, ரஞ்சித், சிலம்பரசன், அஜித், கார்த்திக், விஜய் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் புருஷோத்தமன், பாண்டியன், தட்சிணாமூர்த்தி, டில்லி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.